DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No. 72/2021**

**Deposition of LW2 examined as PW2** (Eye witness) Dt. 03.07.2025

| | |
|---|---|
| Name | சுகன்யா |
| Father's/Husband's Name | மகேந்திரன் |
| Village | சருக்கை, குத்தாலம் தாலுக்கா |
| Taluk | |
| Age | 32/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 03.07.2025

(A1, A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா1 எனது கணவர் ஆவார். எனது மகள் மௌசிகாவை சருக்கை மேலத்தெருவில் உள்ள எனது மாமியார் வீட்டில் தான் வழக்கமாக தூங்குவார். கடந்த 25.11.2019 அன்று மௌசிகாவை அழைப்பதற்காக எனது கணவர் எனது மாமியார் வீட்டிற்கு சென்றார். அப்போது ஆஜர் 1வது எதிரி மணிசேகரன் எதற்காக இங்கு வருகிறாய் இது எங்கள் சொத்து எதற்காக இங்கு வந்து குழந்தையை படுக்க வைக்கிறாய். உனக்கு என்ன வேலை என்று கூறி அடித்ததாக கேள்விபட்டு அங்கு சென் றேன். அப்போது எனது கணவருக்கு இடது பக்க நெற்றியில் அடிபட்டு இரத்தம் வந்து கொண்டிருந்தது. உடே ன அவரை பாலையூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்த போது அவர்கள் முதலில் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளும்படியும் அங்கு வந்து விசாரிப்பதாக தெரிவித்தார்கள். அதன்பின்னர் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு எனது கணவரை அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தேன். அதன் பின்னர் போலீசார் மருத்துவமனைக்கு வந்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் போலீசார் விசாரணையிலும் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் 1-வது எதிரி "இது என்னுடைய இடம் எதற்காக இங்கு வந்து குழந்தையை படுக்க வைக்கிறாய்" என்று திட்டியதாக கேள்விபட்ட விபரத்தை எனது போலீசார் விசாரணையில் தெரிவித்தேனா என்றால்

3.7.25

M. Suganya

தெரிவித்தேன். எனது கணவர் 1-வது எதிரி மணிசேகரனை தாக்கி அதில் அவருக்கு காயம் ஏற்பட்டு அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அதற்காக வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எனது கணவர் மீது இருந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக கொடுத்த இந்த பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரி அல்ல. எதிரிகள் எவ்வித குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

M. Suganya

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

3.7.25

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை